யாரைப் பாதுகாக்க நினைத்தார்களோ அவர்களுக்குத் தண்டனை!

# பொள்ளாச்சி பாலியல் வழக்கில் தலைகுனிந்து நிற்கும் அ.தி.மு.க.வினர்!

## கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. பேட்டி!

**சென்னை, மே 15 -**

**பொள்ளாச்சி பாலியல் வழக்கில் யாரை பாதுகாக்க வேண்டும் என நினைத்தார்களோ அவர்களுக்கு தண்டனை வழங்கப்பட்டு இருக்கிறது. ஆகவே அ.தி.மு.க.வினர்தான் தலைகுனிந்து நிற்கிறார்கள் என தி.மு.க. துணைப் பொதுச்செயலாளரும் - நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவருமான திருமதி கனிமொழி கருணாநிதி அவர்கள் நேற்று முன்தினம் (13.05.2025) தூத்துக்குடியில் செய்தியாளர்கள் சந்திப்பில் குறிப்பிட்டார்.**

இது குறித்து கனிமொழி கருணாநிதி அவர்கள் கூறியதாவது:-

பொள்ளாச்சியில் பெண்களுக்கு எதிராக நடந்த வன்முறைகள், பாலியல் கொடுமைகள் அனைத்தும் நம் மனதில் நீங்காத காயமாக உள்ளன. பொள்ளாச்சி பாலியல் வழக்கில் வழங்கப்பட்டுள்ள இன்றைய தீர்ப்பு, அந்த காயத்திற்கு மருந்தாகவும், பாதிக்கப்பட்ட பெண்களுக்கு நீதியாகவும், குற்றவாளிகளுக்குச் சரியான தண்டனையாகவும் உள்ளது.



**பெண்களுக்கு நம்பிக்கை தரும் தீர்ப்பு!**

பாதிக்கப்பட்ட பெண்களின் பெயர்கள் வெளியிடாமல் பாதுகாக்கப்பட்டு உள்ளது. அவர்களுக்கு நிவாரணம் வழங்கவும் உத்தரவிடப்பட்டு உள்ளது. பாதிக்கப்படக் கூடிய அனைத்து பெண்களுக்கும் நம்பிக்கை தரும் வகையில் இந்தத் தீர்ப்பு உள்ளது.

குறிப்பாக, தாங்கள் கொடுமைக்கு ஆளாக்கப்பட்டாலோ, தங்களுக்கு ஏற்படும் பிரச்சினைகள் குறித்து வெளியே பேசினால் நிச்சயம் நியாயம் கிடைக்கும் என்ற வகையில் தீர்ப்பு அமைந்துள்ளது.

**அ.தி.மு.க. ஆட்சியில் வழக்கை விசாரிக்க முடியாத நிலை!**

பொள்ளாச்சி பாலியல் சம்பவத்தில் நடந்த குற்றத்தை விசாரிக்க முடியாத நிலைதான் அன்றைய அ.தி.மு.க. ஆட்சியில் இருந்தது. குற்றவாளிகளைப் பாதுகாப்பதில் மட்டுமே அவர்கள் கவனம் இருந்தது. குற்றம் சாட்டப்பட்டவர்களில் பலர் அ.தி.மு.க.வினராக இருப்பதால் பாதுகாக்கும் வேலையில் ஈடுபட்டனர்.

தி.மு.க.வும் மற்ற எதிர்கட்சிகளும் ஊடகங்களும் நீதிக்காகப் போராடின. இதற்கடுத்தே, இந்த சம்பவம் தொடர்பாக வழக்குப்பதிவு செய்ய முன்வந்தார்கள். இந்த விவகாரம் தொடர்பாக அன்றைக்கு தி.மு.க. மகளிரணி சார்பில் போராட்டம் அறிவிக்கப்பட்டது.

அப்போது போராட்டம் நடக்கும் இடத்திற்கு நான் செல்லக்கூட அனுமதிக்கவில்லை. பின்பு அனுமதிக்காக ஒரு தர்ணா போராட்டத்தை நடத்த வேண்டியிருந்தது. அந்த அளவுக்கு குற்றவாளிகளைப் பாதுகாப்பதில் கவனம் செலுத்தினார்கள்.

**தி.மு.க. வற்புறுத்தலால் வழக்கு சி.பி.ஐ.க்கு மாற்றப்பட்டது!**

அன்றைக்கு எதிர்கட்சித் தலைவராக இருந்த நமது முதலமைச்சரும் பிற எதிர்கட்சிகளும் என அனைத்து தரப்பிலும் வலியுறுத்திய காரணத்தினால்தான், பின்னர் பொள்ளாச்சி வழக்கு சி.பி.ஐ.க்கு மாற்றப்பட்டது. நாங்கள் ஆட்சிக்கு வந்த பின்பு இதில் நியாயம் கிடைக்கும் என முதலமைச்சர் அவர்கள் அப்போது உறுதி அளித்து இருந்தார்கள். அந்த வாக்குறுதி, இன்று நிறைவேற்றிய நாளாக பார்க்கிறேன்.

தி.மு.க. ஆட்சியின் மீது இன்று மக்களுக்கு நம்பிக்கை இருக்கிறது. குற்றம் நடக்கும் பட்சத்தில் யாராக இருந்தாலும், எந்தக் கட்சியாக இருந்தாலும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே முதல்வரது ஆணை.

**நியாயம் கிடைக்க உறுதியாக இருக்கும் முதல்வர்!**

தமிழ்நாட்டில் குற்றங்கள் நடைபெறக்கூடாது என்பதில் திராவிட மாடல் ஆட்சி உறுதியாக இருக்கிறது. ஒருவேளை சில குற்றங்கள் நடைபெற்று விட்டால், பாதிக்கக் கூடியவருக்கு நியாயம் கிடைக்க வேண்டும் என்பதில் முதலமைச்சர் மிகவும் உறுதியாக இருக்கிறார். யாரை பாதுகாக்க வேண்டும் என நினைத்தார்களோ அவர்களுக்கு தண்டனை வழங்கப்பட்டு இருக்கிறது. ஆகவே அ.தி.மு.க. வினர்தான் தலைகுனிந்து நிற்கிறார்கள். அ.தி.மு.க. கூட்டணியில் இருக்கும் பா.ஜ.க. மத்தியில் ஆளும் நிலையில், இன்றைக்குத் தமிழ்நாடு பெண்களுக்கு பாதுகாப்பான மாநிலமாக விளங்குகிறது என்பதை தேசிய குற்ற ஆவண காப்பகம் சார்பில் வெளியிட்டு இருக்கிறார்கள்.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி அவர்கள். தெரிவித்தார்.



கோவை தெற்கு மாவட்டம், மதுக்கரை நகர கழகத்தின் சார்பில் நடைபெற்ற திராவிட மாடல் ஆட்சியின் சாதனை விளக்க பொதுக்கூட்டம் கோவை தெற்கு மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன் தலைமையில் நகரச் செயலாளர், கோவை மாவட்ட அரசு திட்டக்குழு உறுப்பினர் ந.ராமு (எ) ராம்ஜி வரவேற்புரையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கழக கொள்கை பரப்பு இணைச் செயலாளர், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி சிறப்புரையாற்றினார். இதில் பொள்ளாச்சி பாராளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி, கோவை தெற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் சபரி கார்த்திகேயன், சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் பசுமை நிழல் விஜயகுமார், தலைமை செயற்குழு உறுப்பினர் ஏர்போர்ட் ராஜேந்திரன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் சல்மான் நாசர், நகராட்சி தலைவர் நூர்ஜஹான் நாசர், துணைத் தலைவர் எ.ரமேஷ்குமார், வட்டக் கழக செயலாளர் செந்தில்குமார் குருஜி உள்பட பலர் கலந்து கொண்டனர்

நல்லிகுப்புசாமி – வி.ஜி.சந்தோஷம் – சிவசங்கரி – வெ.இறையன்பு -- கவிஞர் முத்துலிங்கம் பங்கேற்பு!

# இராயப்பேட்டையில் கவிதை உறவு-53ஆவது ஆண்டுவிழா! நூல்கள் வெளியீடு!

## கலைமாமணி ஏர்வாடி எஸ்.இராதாகிருஷ்ணன் ஏற்புரை!

சென்னை, மே 15 - கவிதை உறவு -53 ஆவது ஆண்டு விழா கலைமாமணி ஏர்வாடி எஸ். இராதா கிருஷ்ணன், கவிஞர் சுந்தர கேசி ஆகியோரது நூல்கள் வெளியீட்டு விழா இந்திய அதிகாரிகள் சங்க அரங்கம், 69, திரு. வி.க. நெஞ்சாலை, இராயப்பேட்டையில் 18.05.2025 - ஞாயிறு மாலை 6 மணியளவில் நடைபெறுகிறது.

இவ்விழாவில் கவிஞர் எஸ். விஜயகிருஷ்ணன் வரவேற்கிறார்.

இவ்விழாவிற்கு பத்ம பூஷன் நல்லி குப்புசாமி தலைமையேற்று மலரை வெளியிடுகிறார். நூல்களை வெளியிட்டு கவிஞர் முத்துலிங்கம், கவிஞர் தங்கம் மூர்த்தி ஆகியோர் பாராட்டுரை வழங்குகின்றனர்.

டாக்டர் வானதி இராமனாதன் அறிமுக உரையாற்றுகிறார்.

கலைமாமணி ஏர்வாடி எஸ். இராதாகிருஷ்ணன் எழுதிய ‘என்றும் இருக்கும் வானம்’ எனும் நூலை திருமதி விஜயா தாயன்பனும், ‘ஞாயிற்றுக்கிழமைகளில் நான் பொய் பேசுவதில்லை’ எனும் நூலை டாக்டர் சேது குமணனும் ‘எல்லாம் நன்மைக்கே’ எனும் நூலை கவிஞர் வடுகம் சிவகுமாரும்,

கவிஞர் சுந்தரகேசி எழுதிய ‘அறவுரைகள் தந்த நெறிமுறைகள்’ எனும் நூலை கவிஞர் தவசீலனும் பெற்றுக் கொள்கின்றனர்.

எழுத்தாளர் திருமதி சிவசங்கரி விருதுகள் வழங்கி வாழ்த்துரை வழங்குகிறார்.

சிறந்த நூல்களுக்கான பரிசுகளை முனைவர் வெ.இறையன்பு வழங்கி நிறைவுரையாற்றுகிறார்.

விருதுகள் அறிமுகமும் நிர்வாகமும் குறித்து பேராசிரியர் தமிழ் இயலன், முனைவர் கணபதி சுப்பிரமணியம், கவிஞர் ஸ்ரீதேவி துரையரசு ஆகியோர் பேசுகின்றனர்.

விழாவில் கலைமாமணி ஏர்வாடி எஸ். இராதாகிருஷ்ணன் ஏற்புரையாற்றுகிறார்.

புலவர் சு.மதியழகன் நன்றி கூறுகிறார். திருமதி ரோஜா மணி நிகழ்வை தொகுத்து வழங்குகிறார்.

இவ்விழாவில் கவிதை உறவு - 2024 ஆம் ஆண்டு வெளியான சிறந்த நூல்களுக்கான இலக்கியப் பரிசுகள் வழங்கப்படுகிறது.



பெரம்பலூர் ஒன்றிய தி.மு.க.சார்பில், சிறுவாச்சூர் சிவன் கோவில் அருகில், ”நாடுபோற்றும் நான்காண்டு தொடரட்டும் இது பல்லாண்டு” சாதனை விளக்க தெருமுனைக் கூட்டம் நடைபெற்றது. ஒன்றிய கழகச் செயலாளர் ம.இராஜ்குமார் தலைமையில், சிறுவாச்சூர் கிளை கழகச் செயலாளர் முகமது இஸ்மாயில் வரவேற்புரையில் நடைபெற்ற கூட்டத்தில் இதில் துரை.பாண்டியன், செல்வி. காருண்யா, பெரம்பலூர் மாவட்டக் கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், எம்.பிரபாகரன் எம்.எல்.ஏ. ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள். இந்த கூட்டத்தில் தங்க.சித்தார்த்தன், இரா.ப.பரமேஷ்குமார், செ.அண்ணாதுரை, வழக்கறிஞர்கள் கோவிந்தராஜன், செல்லையா, ராமச்சந்திரன், கலையரசன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். ஜோ.அழகேசன் நன்றி கூறினார்.

